இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 1565/2022

(சிறப்பு அனுமதி மனு(உ) எண்.13840/2019 - லிருந்து எழுகிறது)

சுவர்ணலதா மற்றும் பலர் மேல்முறையீட்டாளர்கள்

எதிர்

கலாவதி மற்றும் பலர் எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு.வி.இராமசுப்ரமணியன்:

1. தகப்பனாரின் மூலமாக ஒன்றும், தாயாரின் மூலமாக மற்றொன்றுமாக நிறைவேற்றப்பட்ட கடைசி இரண்டு உயில்கள் மற்றும் விருப்புறுதி ஆவணங்கள் தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உயில் மெய்ப்பிதழானது, இந்திய வாரிசுரிமைச்சட்டம், 1925 (இதன்பின்னர் 'சட்டம்' என்று குறிப்பிடப்படும்) பிரிவு 384-இன் கீழான ஒரு மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தினால் நீக்கறவு செய்யப்பட்டதால், உயிலின்படி உரிமைகோருகின்ற உயில்வழி உரிமையரின் ஒரு பிரிவினர் மேற்கண்ட மேல்முறையீட்டுடன் வந்துள்ளனர்.

2. நாங்கள் மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.வி.பிரபாகர் மற்றும் எதிர்மேல் முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு.ஜெயந்த் முத்ராஜ் ஆகியோரைக் கேட்டறிந்தோம்.

3. மன்னார் ரெட்டியார் மற்றும் ஆதிலஷ்மியம்மாள் என்ற தம்பதியருக்கு வி.எம்.சந்திரசேகரன் மற்றும் வி.எம்.சிவகுமார் என்ற பெயருடைய மகன்களும், கலாவதி எனும் பெயருடைய ஒருமகளும் உள்ளனர்.

4. தாயார் ஆதிலஷ்மியம்மாள் 14.8.1995 அன்று இறந்துவிட்டார். அவர் தனது இரண்டு மகன்களுக்காதரவாக தன்னுடைய தாய்மாமனிடமிருந்து பெற்ற சொத்துகளையும், அவரால் விலைக்குவாங்கப்பட்ட சொத்துகளையும் உயில்வழி கொடையாக அளித்து, 30.1.1995-ஆம் தேதியிடப்பட்ட உயிலைவிட்டுச் சென்றுள்ளார். மகள் கலாவதிக்கு ஏற்கெனவே போதுமானது வழங்கப்பட்டு விட்டகாரணத்தின் பேரில் அவருக்கு எந்தப்பங்கும் கொடுக்கப்படவில்லை.

5. தந்தையாரான மன்னார் ரெட்டியார் 8.8.2000 அன்று காலமானார். அவர் தனது இரண்டு மகன்களுக்கும், தனது பேரப்பிள்ளைகளுக்கும் ஆதரவாக தனது சொத்துகளை உயில்வழி கொடையாக அளித்து 10.12.1998-ஆம் தேதியிடப்பட்ட உயிலை விட்டுச்சென்றுள்ளார். இந்த உயிலின்படியுங்கூட மகள் கலாவதிக்கு எந்தவொரு சொத்தும் ஒதுக்கப்படவில்லை, ஆனால், உயிலில் அதற்குக் காரணங்கள் இருந்தன.

6. இதனைத் தொடர்ந்து, மூத்த மகனான வி.எம்.சந்திரசேகரன் என்பவர் இங்குள்ள மேல்முறையீட்டாளர்களான அவரது மனைவி சுவர்ணலதா மற்றும் மகன்களான சி.கார்த்திகேயன் மற்றும் சி.ரிஷிகேஷன் ஆகியோரை எஞ்சுநர்களாக விட்டுச்சென்று, அக்டோபர் 1999-இல் காலமானார்.

7. அதன்பின்னர், மகள் கலாவதி மற்றும் (உயிலவர்களின்) எஞ்சியுள்ள மகனான வி.எம்.சிவகுமார் ஆகியோர் பாகப்பிரிவினைக்காக அசல் வழக்கு எண் 387/2005-ஐ பூந்தமல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அதுகுறித்து தெரியவந்ததன்பேரில், இங்குள்ள மேல்முறையீட்டாளர்களான மூத்தமகன் வி.எம்.சந்திரசேகரனின் மனைவி மற்றும் மகன்கள் ஆகியோர் மன்னார்ரெட்டியார் மற்றும் ஆதிலஷ்மியம்மாளின் உயில்களுக்கான உயில் மெய்ப்பிதழ்களை வழங்கக்கோரி சட்டப்பிரிவுகள் 270, 276 மற்றும் 289-இன் கீழ்வேலூர் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் கோப்பில் உயில் மெய்ப்பிதழ் அசல் மனு எண் 1/2005-ஐ தாக்கல் செய்துள்ளனர். இம்மனுவானது, உயிலவர்களின் மகள் மற்றும் இரண்டாவது மகனால் எழுச்சியுடன் வாதிடப்பட்டது. எவ்வாறாயினும், மாவட்டநீதிமன்றம் 7.6.2010-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் மூலம் தாயார் ஆதிலஷ்மியம்மாளால் நிறைவேற்றப்பட்ட 30.1.1995-ஆம் தேதியிடப்பட்ட உயில் மற்றும் தகப்பனார் மன்னார் ரெட்டியாரால் நிறைவேற்றப்பட்ட 10.12.1998-ஆம் தேதியிடப்பட்ட உயில் ஆகிய இரண்டு உயில்களுக்கும் உயில் மெய்ப்பிதழ் வழங்கியது.

8. உயில் மெய்ப்பிதழ் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை எதிர்த்து, உயிலவர்களின் மகள் மற்றும் இரண்டாவது மகன் (இங்குள்ள 1 மற்றும் 2-ஆவது மேல்முறையீட்டாளர்கள்) மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கோப்பில் சட்டத்தின் பிரிவு 384-இன் கீழ் ஒருமேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி மேல்முறையீடானது, இரண்டு உயில்களின் நிறைவேற்றுகையும் சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளால் சூழப்பட்டுள்ளது என்ற அடிப்படையில், கேள்விக்குள்ளான தீர்ப்புரையின் வாயிலாக உயர் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி தீர்ப்புரையால் மனக்குறையுற்ற உயில்வழி உரிமையர்கள் மேல்முறையீட்டின்பேரில் எங்கள் முன்பாக உள்ளனர்.

9. உயில் மெய்ப்பிதழ் நீதிமன்றம் முன்பு மேல்முறையீட்டாளர்களின் வாதம் யாதெனில், பெற்றோர், அவர்களின் கடைசி உயில் மற்றும் விருப்புறுதி ஆவணத்தை தீர்வு செய்வதற்குரிய சீரான மனநிலையுடன் நிறைவேற்றினர் என்பதும், மேலும், அந்த உயில்கள் சட்டத்தால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டன என்பதுமாகும். இந்திய சாட்சியச்சட்டம்,1872, பிரிவு 68-இன் வாசகங்களின்படி, தாயார் ஆதிலஷ்மியினுடைய உயிலின் நிறைவேற்றுகையை நிலைநாட்டுவதற்கு மேல்முறையீட்டாளர்கள், திரு.எஸ்.இராஜசேகரன் என்பவரை ம.சா.2-ஆக விசாரித்தனர். உயிலில் சான்றொப்பமிட்டவர்களில் அவரும் ஒருவராவார். உயிலில் சான்றொப்பமிட்ட மற்றொருவர் தகப்பனார் மன்னார் ரெட்டியாரைத் தவிர வேறெவருமல்ல. தாயாரின் உயிலினுடைய எழுதுநர் திரு.பி.நித்யானந்தமும் ம.சா. 3-ஆக விசாரிக்கப்பட்டார்.

10. தகப்பனார் மன்னார்ரெட்டியார் அவர்களின் உயிலில் சான்றொப்பமிட்டவர்களில் ஒருவரான திரு.எம்.தக்ஷிணாமூர்த்தி என்பவர் ம.சா.4-ஆக விசாரிக்கப்பட்டார், மேற்படி உயிலின் எழுதுநரான திரு.வி.சிவராம் என்பவர் ம.சா.5-ஆக விசாரிக்கப்பட்டார்

11. தாயார் ஆதிலஷ்மியம்மாளால் நிறைவேற்றப்பட்ட உயில் ஒரு பதிவு செய்யப்படாத உயிலாகும். அதே சமயத்தில், தகப்பனார் மன்னார் ரெட்டியாரால் நிறைவேற்றப்பட்ட உயில் ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலாக இருக்கின்றது. இவ்விரண்டு உயில்களும் முறையே ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. உயிலவர்களின் இறப்புச் சான்றிதழ்கள் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன, மேலும், எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டபாகப் பிரிவினைக்கான உரிமை வழக்கிலுள்ள வழக்குரை நகல் ம.சா.ஆ.5-ஆககுறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. மகள் கலாவதியே (1-ஆம் எதிர் மேல்முறையீட்டாளர்) எ.சா.1-ஆகவும், மற்றொரு சகோதரரான திரு.வி.எம்.சிவகுமாரே (2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்) எ.சா.2-ஆகவும் விசாரிக்கப்பட்டனர். எதிர்மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் எந்தவொரு ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

13.எதிர்மேல்முறையீட்டாளர்கள், தங்களுடைய பெற்றோர் ஒருபொழுதும் எந்தவொரு உயிலையும் நிறைவேற்றவில்லை;மேலும், மூத்த மகனான வி.எம்.சந்திரசேகரன் வெற்றுத்தாள்களில் தாயாரின் கையொப்பங்களைப் பெற்று மோசடி செய்து, அதனை ஓர் உயில் போன்று பொய்யாகப் புனைந்துள்ளார்; மேலும், எந்தவொரு நேர்விலும் உயிலவர்களுக்கு உயில் மூலமாகச் சொத்துகளை உரிமை மாற்றிக் கொடுப்பதற்கு உரிமை இல்லை என்பதன் அடிப்படையில் உயில் மெய்ப்பிதழ் நடவடிக்கைகளை எதிர்கொண்டனர்.

14. உயில் மெய்ப்பிதழ் நீதிமன்றம் முன்பு இவ்விரண்டு உயில்களைச் சூழ்ந்துகொண்டிருக்கும் சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் எனக்கூறப்படுபவற்றின் மீது எதிர்மேல்முறையீட்டாளர்கள் அவர்களுடைய கவனத்தைச் செலுத்தினர். உயிலின் மூலமாக அச்சொத்துகளை உரிமைமாற்றிக் கொடுப்பதற்கு உயிலவர்களுக்கு உரிமையில்லை என்ற வாதத்தை எதிர்மேல்முறையீட்டாளர்கள் எழுப்பியிருந்தாலும், உயில்மெய்ப்பிதழ் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது எந்தவொரு சொத்தின் உரிமை மூலம் குறித்த எதிர்த்துரைக்கப்பட்ட பிரச்சினைகளையும் தீர்மானிப்பதற்கானதல்ல என்ற காரணத்தின் பேரில்மேற்கூறப்பட்டதை உயில்மெய்ப்பிதழ் நீதிமன்றம் முழுவதுமாக நிராகரித்தது.

15.சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் தொடர்பான சாட்டுரைகளைப் பொறுத்தளவில், எதிர்மேல்முறையீட்டாளர்களால் சிறப்புற கூறப்பட்ட சூழ்நிலைகள் சந்தேகத்தை எழுப்புகிறது என்பதை உயில்மெய்ப்பிதழ் நீதிமன்றம் ஏற்கவில்லை. ஆதலால், முதன்மை அதிகாரவரம்புடைய நீதிமன்றம் உயில்மெய்ப்பிதழ் வழங்கி உத்தரவிட்டது.

16.உயில்மெய்ப்பிதழ் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை மாற்றியமைக்கையில், உயர் நீதிமன்றமானது பின்வரும் காண்முடிவுகளைப் பதிவுசெய்தது:

(i) பெண் உயிலவரான ஆதிலஷ்மியம்மாள் 30.1.1995-ஆம் தேதியிடப்பட்ட பதிவுசெய்யப்படாத உயிலின் (ம.சா.ஆ.1) நிறைவேற்றுதலுக்கு முன்னர் நோய்களால் அவதியுற்று வந்ததாகக் கூறப்படுகிறது. இந்நோய்கள், உடல் ரீதியானதாகவோ அல்லது மனரீதியானதாகவோ இருக்கக்கூடும்; உயிலின் உண்மைத்தன்மை குறித்து கேள்வி எழுப்புவதற்கு உடற்ரீதியான நோய்கள் அடிப்படையாக இருக்கமுடியாத

அதேசமயத்தில், மனநோய்கள் இன்றியமையாத காரணமாக இருக்கக்கூடும். பெண் உயிலவரான ஆதிலஷ்மியம்மாள் அவதியுற்று வந்தநோய்கள் குறித்த விவரங்களை அளிக்காதது சந்தேகத்தை உருவாக்கியுள்ளது;

(ii) தகப்பனார் மன்னார் ரெட்டியாருடைய ஆயுட்காலத்தின் போது, தாயார் ஆதிலஷ்மியம்மாளின் உயிலை, உயில்வழி உரிமைபெற்றவர்கள் உயில்மெய்ப்பிதழ் செய்யத்தவறியது ஒருசந்தேகத்திற்குரிய சூழ்நிலையாகும்;

(iii) ம.சா.1-இன்கூற்றுப்படி, ம.சா.ஆ.2-ஆகுறியீடு செய்யப்பட்டு, தகப்பனார் மன்னார்ரெட்டியாரால் நிறைவேற்றப்பட்ட உயிலானது 10.12.1998 அன்று இரவுநேரத்தின்போது எழுதப்பட்டதாகும். ஆனால், ம.சா.4 மற்றும் ம.சா.5-இன் (சான்றொப்பமிட்டவர்களில் ஒருவர் மற்றும் எழுதுநர்) சாட்சியத்தின்படி, உயிலானது, 10.12.1998 அன்று காலை 7.00 மணியளவில் எழுதப்பட்டு, மாலை 3.00 மணியளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, ம.சா.1-இன்வாக்குமூலத்திற்கும், ம.சா.4 மற்றும் ம.சா.5-இன் வாக்குமூலத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

(iv) தகப்பனாரது உயில் பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் நேரம் குறித்த ம.சா.1-இன் அறியாமை, சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கான மற்றுமொரு சூழ்நிலையாகும்.

(v) இவ்விரண்டு உயில்களையும் நிறைவேற்றும் போது மகள் மற்றும் இரண்டாவது மருமகளின் முன்னிலையை தகப்பனார் உறுதி செய்யத்தவறியது சந்தேகத்தை உருவாக்குகின்ற மற்றுமொறு சூழ்நிலையாகும்.

(vi) முதலாம் மேல்முறையீட்டாளர் ஒரு நேரடி பயனாளி என்ற போதிலும், இவ்விரண்டு உயில்கள் நிறைவேற்றப்பட்ட சமயத்தின்போது இங்குள்ள 1-ஆம் மேல்முறையீட்டாளரின் முன்னிலையானது, மேலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒருசூழ்நிலையாகும்.

(vii) தாயாரால் நிறைவேற்றப்பட்ட ம.சா.ஆ.1-ஆனது (உயில்) ஆறுபக்கங்களைக்கொண்டுள்ளது. பெண் உயிலவரின் கையொப்பம் 4 மற்றும் 6-ஆவது பக்கங்களில் துல்லியமாக அதேஇடத்தில் காணப்படுகிறது. பெண் உயிலவரின் கையொப்பமானது ம.சா.ஆ.1-இல்(உயில்) அதே இடத்தில் பெறப்பட்டு இருந்தது என்பதை 4 மற்றும் 6-ஆம்ப க்கங்களிலுள்ள கையொப்பத்தின் மேலிடப்பட்ட கையொப்பம் காண்பிக்கிறது

(viii) ம.சா.ஆ.1-இன் (உயில்) முதல் பகுதியிலுள்ள வரி இடைவெளியானது உயிலின் மற்ற பகுதிகளிலுள்ள வரி இடைவெளியைவிட மிகுதியாக உள்ளது. உயிலின் முதல் இரண்டு பக்கங்களில் இருக்கும் எழுதும்பாணியானது கடைசி இரண்டு பக்கங்களில் இருக்கின்ற எழுத்துருவிலிருந்து சிறிது வேறுபட்டு உள்ளது. சான்றொப்பமிட்டவர்கள் மற்றும் எழுதுநரின் கையொப்பங்கள் சிறிய இடைவெளிக்குள் காணப்படுகின்றன.

மன்னார் ரெட்டியாரின் கையொப்பமானது, ம.சா.ஆ.1-இல் (உயில்) சான்றொப்பமிட்டசாட்சி என்ற முறையில் சாட்சி என்ற சொல்லுக்குக்கீழ் காணப்படாமல், மாறாக பக்கவாட்டில் காணப்படுகிறது.

(ix) உயில்1-ஆம் மேல்முறையீட்டாளரின் கைவசம் எப்படி வந்தடைந்தது என்பது தெளிவாகவில்லை.1-ஆம் மேல்முறையீட்டாளரின் கணவரானவி. எம்.சந்திரசேகரன் பெற்றோருக்கு முன்பே மரணமுற்றாரா? என்பதைக் காண்பிக்க சான்றாதாரம் ஏதும் இல்லை. இச்சூழலில் உயில் மெய்ப்பிதழ் கோருவதிலிருந்த காலதாமதமானது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

(x) உயில் வழி கொடையிலிருந்து மகளை முற்றிலுமாக விலக்கியதும், எந்தெந்தத் தேதியில் மகளுக்கு குறிப்பிட்ட தொகை செலுத்தப்பட்டது என்பதை உயிலில் குறிப்பிடத்தவறியதும், மிகவும் முக்கியமானதாகும்.

17. எனினும், மேற்கண்ட சூழ்நிலைகள் ஒவ்வொன்றும், தனித்தனியாகவோ ஒட்டுமொத்தமாகவோ சந்தேகத்தை உருவாக்கவில்லை. ம.சா.ஆ.1-இல் (உயில்) உள்ளதாயார் ஆதிலஷ்மியம்மாளின் கையொப்பத்தை மறுத்துரைப்பதற்கில்லை. அது 30.1.1995 அன்று நிறைவேற்றப்பட்டது, மேலும், அவரது கணவரானம ன்னார் ரெட்டியார் உயிலில் சான்றொப்பமிட்டவர்களில் ஒருவராவார்.

உள்ளபடியே மகள் கலாவதி 1970-ஆம்ஆண்டு வங்கி ஊழியருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளார் என்பது ம.சா.ஆ.1-ஐவாசிப்பதிலிருந்து தெரியவருகிறது. ம.சா.ஆ.1-இன்படி (உயில்) திருமணத்தின் போதுமகளுக்கு 50சவரன் தங்கநகைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒட்டுமொத்தமாக ரூ.75,000/-எனும் அளவிற்கு பல்வேறு தொகைவழங்கப்பட்டுள்ளது. சென்னையின் புறநகர் பகுதியில் அமைந்துள்ள அம்பத்தூரில் இரண்டு காலிமனைகள் வாங்கும் பொருட்டு மகள் கலாவதிக்கு தாயார் ரூ.25,000/-கொடுத்துள்ளார் என்றும ம.சா.ஆ.1-இல் (உயில்) மேற்கொண்டு குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் மகளின்மகள்,இரண்டாவது மகனான வி.எம்.சிவகுமாருக்கு திருமணம் செய்து கொடுக்கப் பட்டுள்ளார் என்பதையும் உயில்குறிப்பிடுகிறது. இதன் காரணமாகத்தான் இரண்டாவது மகனான வி.எம்.சிவகுமார் மகள் கலாவதியுடன் கைகோர்த்துக்கொண்டார். மேலும், கலாவதியின்கணவர் (மருமகன்) பெற்றகடனைத் தீர்ப்பதற்கு ரூ.40,000/-செலுத்தியதுகுறித்தும் ம.சா.ஆ.1 குறிப்பிடுகிறது.

18. எதிர்பாராவிதமாக, உயர்நீதிமன்றம் மேற்கண்ட அம்சங்களை முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட்டு, காரண விளக்கங்களை விஞ்சியதாயிருக்கின்ற அத்தீர்முடிவினை நியாயப்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிய முனைந்தது.

19. அதேபோன்று, ம.சா.ஆ.2-ஆனது (தகப்பனாரின் உயில்) இரண்டாவது மகனான வி.எம்.சிவகுமாருக்கு மகளின் மகள் திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளார்; மேலும், ஆதிலஷ்மியம்மாள் 30.1.1995-ஆம் தேதியிடப்பட்ட ஒரு உயிலைவிட்டுச்சென்றுள்ளார் எனும் படியான வாசகங்களைக் கொண்டுள்ளது

20. தகப்பனார் மன்னார்ரெட்டியார், தாயாரின் உயிலில் (ம.சா.ஆ.1) சான்றொப்பமிட்டார் என்பதும், பதிவுசெய்யப்பட்ட உயிலான அவருடைய சொந்த உயிலில் (ம.சா.ஆ.2) தாயாரின் உயில்பற்றிதகப்பனார் குறிப்பிட்டுள்ளார் என்பதும் கண்டறியப்பட்டால், முன்வைக்கப்பட்ட அனைத்து சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளும் தானாகவே மறைந்துவிடும்.

21.உயிலவர்கள் தீர்வு செய்வதற் குரிய சீரான மனநிலையில் இல்லை என்பது எதிர்மேல்முறையீட்டாளர்களின் வழக்கு விவரமாக இல்லாத போதிலுங்கூட, உயிலவர் அவதியுற்று வந்த நோயின்தன்மையைவெளியிடாத தன் பேரில் மேல்முறையீட்டாளர்களின் தவறினை உயர் நீதிமன்றம் கண்டறிந்தது. உயில்வழி கொடையிலிருந்து இயல்பான வாரிசுகளில் ஒருவரை விலக்கியதென்பதே ஐயத்திற்கிடமான சூழ்நிலைகள் உள்ளன எனத் தீர்மானிப்பதற்கான காரணமாக இருந்துவிடமுடியாது. மகளை விலக்கியது மிகவும் இயல்பாகவே நிகழ்ந்துள்ளது என்பதைக்காண்பிக்க ம.சா.ஆ.1-இல்கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் மிகவும் நம்பத்தகுந்தவையாகவே இருக்கின்றன. ம.சா.ஆ.1-ஆனது (உயில்) வெற்றுக்காகிதங்களில் தாயாரின் கையொப்பங்களைப் பெற்றுபொய்யாகப் புனையப் பட்டிருக்குமாயின், தாயாரின் மூலமாக நிறைவேற்றப்பட்ட

உயில் குறித்து தகப்பனார் தன்னுடைய உயிலில் (ம.சா.ஆ.2) குறிப்பிடுவதற்கான அவசியம் இருந்திருக்காது.

22.மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் உயில்களுக்கு உயில்மெய்ப்பிதழ் வழங்கக்கோரியதில்ஏ ற்பட்ட காலதாமதத்தை சந்தேகத்திற்குரிய சூழ்நிலையாக உயர்நீதிமன்றம் எவ்வாறு தீர்மானித்தது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ம.சா.ஆ.1, 30.1.1995 அன்று நிறைவேற்றப் பட்டுள்ளது, பெண் உயிலவர் 14.8.1995 அன்று இறந்துள்ளார். தகப்பனார் 8.8.2000 வரையில் உயிருடன் இருந்துள்ளார் ஆகவே, மேற்படி உயிலுக்கு உயில் மெய்ப்பிதழ் வழங்கக் கோருவதற்கான அவசியம் மேல்முறையீட்டாளர்களுக்கு இல்லை. வி.எம்.சந்திரசேகரன் (1-ஆம்மேல்முறையீட்டாளின் கணவரும், 2 மற்றும் 3-ஆம் மேல்முறையீட்டாளரின் தகப்பனாரும் ஆவார்) தகப்பனார் மன்னார்ரெட்டியாருக்கு முன்பே மரண முற்றதன் காரணமாக 8.8.2000 அன்று மன்னார் ரெட்டியாரின் இறப்பிற்குப்பின்னர்,மேல்முறையீட்டாளர்களுக்கு எந்த ஆதரவும் இல்லை என்பது தெளிவு. வி.எம்.சந்திரசேகரன்,அக்டோபர் 1999-ல் இறந்துவிட்டார் என்று கேள்விக்குள்ளான தீர்ப்புரையில் பதிவு செய்யப்பட்டு உள்ளது

23. எதிர்மேல்முறையீட்டாளர்கள் அசல்வழக்கு எண் 387/2005-இல் பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்கினைத்தாக்கல் செய்த பின்னர்தான் உயிலுக்கு உயில் மெய்ப்பிதழ் வழங்கக்கோருவதற்கான அவசியம்

மேல்முறையீட்டாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே,உயில் மெய்ப்பிதழ் வழங்கக்கோருவதில் மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் உண்மையில் எந்தக் காலதாமதமும் இல்லை.

24. உயர்நீதிமன்றமானது, ம.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்ட நேரம்குறித்து 1-ஆம்மேல்முறையீட்டாளரின் தரப்பிலுள்ள அறியாமையையும், ம.சா.1-ஆக அவர் அளித்த வாக்குமூலத்திற்கும், ம.சா.4 மற்றும் 5-இன் வாக்கு மூலத்திற்கும் இடையேயான சிறுமுரண்பாடுகளையும் மிகுதியாக ஆராய்ந்ததன் பொருட்டு சிறிய விடயத்தை மிகைப்படுத்தியுள்ளது. ம.சா.ஆ.2 நிறைவேற்றப்பட்ட சமயத்தில் மகள் மற்றும் இரண்டாவது மருமகளின் முன்னிலையை உறுதி செய்ய உயிலவர் மன்னார்ரெட்டியார் தவறியது பற்றி உயர்நீதிமன்றத்தால் எடுக்கப்படவேண்டியதான எதிர்நிலையான அனுமானத்திற்கு சட்டப்படி எந்த அடிப்படையும் இல்லை.

25. உயிலின் நிறைவேற்றத்தைச் சூழ்ந்திருக்கும் சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் தொடர்பானசட்டமானது ஏற்கெனவே நன்கு அறுதியிடப்பட்டுள்ளதால், அதனை மீண்டும் எடுத்துரைப்பதற்கான அவசியமில்லை. இந்நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்முடிவுகளில் ஒன்றான, கவிதாகன்வர்-எதிர்-திருமதி.பமேலாமேத்தா மற்றும் பலர் (ஏ.ஐ.ஆர்.ஆன்லைன் 2020 எஸ்.சி.544: (ஏ.ஐ.ஆர்.2020 எஸ்.சி.2614)]-ஐ குறித்துரைப்பது போதுமானதாகும்; அதில் ஹெச்.வெங்கடாச்சலஐயங்கார் -எதிர்- பி.என்.திம்மஜம்மா (ஏ.ஐ.ஆர்.1959எஸ்.சி.443] முதற்கொண்டு ஏறக்குறைய முந்தைய அனைத்து தீர்முடிவுகளையும் இந்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய வழக்குகள் என்பவை முக்கியமாக உயிலவரின் கையொப்பத்தை பிரச்சினைக்குள்ளாக்கும் அல்லது உயிலவரின் மனத்திறனை கேள்விக்குள்ளாக்கும் அத்தகைய வழக்குகளே ஆகும்.

(மேற்கண்ட) கவிதாகன்வர்-இல் குறித்துரைக்கப்பட்ட ஏறக்குறைய இந்நீதிமன்றத்தின் முந்தைய அனைத்து தீர்முடிவுகளும் உயிலவர் தீர்வுசெய்வதற்குரிய சீரான மனநிலையில் இல்லாதபோது சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளாகி விட்ட அவ்வாறான சூழல்களைக் குறிப்பிடுகின்றன எனும் சங்கதியின் மூலம் இதை அறிந்து கொள்ளமுடிகிறது. உயிலின் நிறைவேற்றம் பற்றிய உண்மைத்தன்மையை மதிப்பீடு செய்யும் விடயத்தில் உயிலவர் தனது அனைத்துபிள்ளைகளுக்கும் நியாயமாகவும், நேர்மையாகவும் பங்கீடு செய்துள்ளாரா? என்பதைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்திற்கு உரிமையில்லைஉடைமைமாற்றத்திற்குவகு முறைக்கூறு 14- ஐ நீதிமன்றம் பொருத்திப்பார்க்கவில்லை

26. உயிலவரின் இரண்டாவது மகன் மற்றும் மகள் ஒன்றுசேர்ந்து கொண்டதற்கு பின்புலத்திலுள்ள காரணங்களை அகக்கண்ணால் புரிந்துகொள்வது சிரமமல்ல.ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகிய இரண்டு உயில்களின்படி இரண்டு மகன்களுக்கும் இடையில் சொத்துகள் சரிசமமாகப் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. முதல் மகன் வி.எம்.சந்திரசேகரன் தற்போது உயிருடன் இல்லை. மறுப்புக்கிடமின்றி, கலாவதியின்மகள் (உயிலவரின்இரண்டாவதுமகனான) வி.எம்.சந்திரசேகருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளார். ஆகவே, இவ்விரண்டு உயில்களின்படி உயில்வழி கொடை செயற்படுத்தப்படுமானால், அதன்பயனாக வி.எம்.சிவகுமாரின் குடும்பத்தார் சொத்துகளில் 2/3பங்கினைப்பெறலாம், இது வி.எம்.சிவகுமாருக்கு உயில்களின் படி கிடைக்கக்கூடிய பாதிப்பங்கினைவிட அதிகபயனளிக்கத்தக்கதாகும். எதிர்பாராவிதமாக, இந்த அம்சத்தை உயர்நீதிமன்றம் முற்றிலுமாகக்

கவனிக்கத்தவறியதோடு, உயில்களை சந்தேகத்துடன் ஆராயத்தொடங்கியது. எனவே, உயர்நீதிமன்றத்தின் கேள்விக்குள்ளான தீர்ப்புரையானது நிலைநிறுத்தும் திறனற்றதாக உள்ளது.

27. மேற்கண்டதைக்கருத்திற்கொண்டு இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தின் கேள்விக்குள்ளான தீர்ப்புரை தள்ளுபடி செய்யப்படுவதுடன், இவ்விரண்டு உயில்களுக்கு உயில் மெய்ப்பிதழ் வழங்கிய வேலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்புரை மீட்டளிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவேதுமில்லை. மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது

மாண்புமிகு நீதியரசர் திரு.ஹேமந்த குப்தா

மாண்புமிகு நீதியரசர் திரு.வி.இராமசுப்ரமணியன்

புதுதில்லி
30.03.2022

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "